16.02.2024 அ.வ. எண். 412/2019 வா.சா.2 தனஞ்செழியன்

குறுக்கு விசாரணை

என் தகப்பனார் பெயர் கோபால் முதலியார். என் தகப்பனாருக்கு பூர்வீக சொத்து இருக்கிறது. என் தகப்பனார் 1970 ஆம் ஆண்டு இறந்தார். பூர்வீக வீடு, நிலங்கள் உள்ளது. பாகம் கோரி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். இவ்வழக்கில் குடும்ப சொத்துக்களை சேர்க்கவில்லை. காலஞ்சென்ற என் அண்ணன் தமிழ்மணிக்கு 2 மகன்கள், ஒரு மகள், மனைவி வாரிசுகள். தமிழ்மணியின் மனைவி தான் 1ம் பிரதிவாதி. தமிழ்மணி 2016 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். பூர்வீக சொத்துக்களில் தமிழ்மணிக்கு பாகம் உண்டு. தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் தவறு. 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற கிரய ஆவணத்தில் சுயமாக கிரயம் பெற்ற சொத்து என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறு. 14.07.2005 ஆம் தேதி 1ம் பிரதவாதி தனிப்பட்ட முறையில் கிரயம் பெற்றதாக தான் கிரய ஆவணத்தில் உள்ளது என்றால் தவறானவை. என் சகோதரர் தமிழ்மணி இராணுவத்தில் சுமார் 45 ஆண்டுகள் பணிபுரிந்தார். தமிழ்மணி எந்த காலத்திலும் எங்களுடன் கூட்டுக்குடும்பமாக வாழவில்லை என்றால் தவறானவை. நாங்களும் தமிழ்மணியும் கூட்டுக்குடும்பமாக வசித்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. தமிழ்மணி குடும்பத்தின் கர்த்தாவாக 15 ஆண்டுகள் இருந்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என் அண்ணன் நெருப்பில் குதிக்கச்சொன்னாலும் குதிப்பேன் என வழக்குரையில் சொல்லியுள்ளேன் அதை நிரூபிக்கும் வகையில் நிகழ்ச்சிகள் ஏதேனும் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் அது உண்மை. தமிழ்மணி மீதும், 1ம் பிரதவாதி மீதும் கண்மூடித்தனமாக நம்பிக்கை வைத்திருந்ததாக வழக்கிற்காக சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. வழக்குரையில் சரஸ்வதி, கோபு ஆகிய இருவரும் கிரயம் செய்யப்போகிறார்கள் என்ற விஷயம் எனக்கு தான் தெரியவந்தது. எனக்கு எந்த தேதியில் தெரியவந்தது, எந்த தேதியில் தமிழ்மணியிடம் சொன்னேன் என்று வழக்கில் சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் வழக்கில் சொல்லவில்லை என்றும், தற்போது சாட்சியத்தில்

வழக்குரையில் சொல்லியுள்ளதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணங்களில் கிரயத்தொகைகளாக ரூ.55,000/-, ரூ.27,075/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது மார்க்கெட் மதிப்பாகும். வழக்கில் கிரயத்தொகையாக ரூ.6,00,000/- என குறிப்பிட்டு அதில் 1ம் வாதி ரூ.2,00,000/-மும், 2ம் வாதி ரூ.1,00,000/-மும், பாக்கி ரூ.3,00,000/-ம் 1ம் பிரதிவாதி செலுத்தியதாக வழக்குரையில் சொல்லியுள்ளோம். 1ம் வாதி ரூ.2,00,000/-மும், 2ம் வாதி ரூ.1,00,000/- கொடுத்ததற்கு ஆதாரம் உள்ளது. ஆதாரத்தை தாக்கல் செய்துள்ளோம். 1ம் வாதி ரூ.2,00,000/-மும், 2ம் வாதி ரூ.1,00,000/-மும் கொடுக்கவில்லை என்றும், வழக்கிற்காக கொடுத்ததாக தவறாக சொல்கிறோம் என்றும், கொடுத்ததற்கு ஆதாரமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் எந்தவித பணமும் செலுத்தாத காரணத்தினால் தான் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணங்களில் நாங்கள் பணம் செலுத்தியதாக குறிப்பிடவில்லை என்றும், 1ம் பிரதிவாதி தான் கிரயத்தொகை செலுத்தியதாக உள்ளது என்றால் தவறு. கிரய ஆவணம் ஏற்பட்டபோது 1ம் வாதி வெளியூரில் இருந்ததாகவும், 2ம் வாதி டிரைவராக வெளிமாநிலத்திற்கு சென்றதாகவும் சொல்லியுள்ளேன். அதற்கான ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். நான் எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணங்களில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். நாங்கள் உண்மையில் பணம் கொடுத்திருந்தால் சாட்சியாக கையெழுத்து போட்டிருக்கமாட்டேன் என்றும், கிரயதாரராக என் பெயரை சேர்க்க சொல்லியிருப்பேன் என்றால் தவறானவை. என் அண்ணன் தமிழ்மணியின் அறிவுரைக்கு கட்டுப்பட்டு 1ம் பிரதிவாதி பெயரில் கிரய ஆவணங்கள் ஏற்பட்டதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தமிழ்மணியின் அறிவுரைக்கு கட்டுப்பட்டு 1ம் பிரதிவாதி பெயரில் தான் கிரய ஆவணங்கள் ஏற்பட்டது என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் வாய்மொழியாக சொன்னது தான். குடும்ப சொத்துக்களை

பாகம் செய்யும் போது தாவா சொத்துக்களிலும் பாகம் கொடுப்பதாக தமிழ்மணி சொன்னதாக வழக்கில் சொல்லியுள்ளோம். குடும்ப சொத்துக்களை பாகம் பிரிக்கவில்லை. குடும்ப சொத்துக்களை சேர்க்காமல் தாவா சொத்துக்களை மட்டும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றும், அதனால் வழக்கு பகுதி பாகப்பிரிவினை கோட்பாட்டின் படி வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் அது தனி, இது தனி. செங்கல் சூளை அமைக்க அரசாங்கத்தில் அனுமதி பெறவேண்டும்.

**கேள்வி**

செங்கல் சூளை அமைக்க 1ம் பிரதிவாதியின் மகள் அரசாங்கத்தில் அனுமதி கோரி 1ம் பிரதிவாதி பெயரில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றால்?

**பதில்**

என் அண்ணன் மகள் பெயரில் உள்ள பற்றுதல் காரணமாக அண்ணன் மகள் பெயரில் அரசாங்கத்தில் அந்த அனுமதியை பெற்றோம்.

என் அண்ணன் மகள் மீது இருந்த பாசத்தால் அவர் பெயரில் உரிமம் பெற்று செங்கல் சூளை நடத்தியதாக வழக்கிலும், முதல் விசாரணை உறுதிக்கூற்றிலும் சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் என் அண்ணன் மகள் மீது இருந்த பாசத்தால் அவர் பெயரில் உரிமம் பெற்று செங்கல் சூளை நடத்தியதாக வழக்கிலும், முதல் விசாரணை உறுதிக்கூற்றிலும் சொல்லவில்லை என்றும், வழக்கிற்காக தற்போது தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 100 லோடு மண் கொட்டிவைத்திருந்தோம் என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இருக்கிறது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. செங்கல் சூளையை நாங்கள் தான் அமைத்து செங்கல் விற்பனை செய்தோம் என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. 1ம் பிரதிவாதி தான் உரிமம் பெற்று செங்கல் சூளை நடத்திவந்தார் என்றும், அவரிடம் நாங்கள் கூலிக்கு வேலை செய்துவந்தோம் என்றால் தவறு. தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு மட்டுமே தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட

சொத்துக்கள் என்றும், அதில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பிரித்துக்கொடுக்க தமிழ்மணிக்கே கிடையாது, உரிமை இல்லை என்றால் சரியல்ல. கூலிப்படையை வைத்து எங்களை விரட்டியபோது தான் கிரயம் பெற்றது தெரியும். கூலிப்படையை வைத்து எங்களை விரட்டியதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்பதால் 1ம் பிரதிவாதி 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரயம் சட்டப்படி செல்லக்கூடியது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதி கிரயம் செய்து ஒப்படைத்து விட்டதால் அதில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. செங்கல் சூளை 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதால் எங்களுக்கு பல இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சட்டத்திற்கு கட்டுப்பட்டவர்கள் என்றும், சட்டத்திற்கு கட்டுப்படாதவர்கள் என்று தவறாக சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சட்டத்திற்கு கட்டுப்பட்டவர்கள் என்பதால் உரிமையில்லாத சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளபோதும் வழக்கு நடத்திவருகிறார்கள் என்றால் சரியல்ல. பெண்கள் சொத்துரிமை சட்டத்தின் படி 1ம் பிரதிவாதிக்கு தான் தாவா சொத்துக்கள் பாத்தியம் என்றும், அதில் அவர் கணவருக்கே உரிமையில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்களின் உரிமையாளர் என்பதால் 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்துள்ள கிரயம் சட்டப்படி செல்லும் என்றும், நாங்கள் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கு 1ம் பிரதிவாதி தான் உரிமையாளர் என்பதால் அவரிடம் நாங்கள் பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் செங்கல் சூளை நடத்த ஆழ்துளை கிணறு அமைத்ததும், மின் இணைப்பு பெற்றதும் 1ம் பிரதிவாதி தான் என்றால் அதற்கான செலவை நாங்கள் தான் செய்தோம். தாவா சொத்திற்கான தீர்வையை 1ம் பிரதிவாதி தான் செலுத்தினார் என்றால் நாங்கள் செலுத்தி அவரிடம்

கொடுத்துவிடுவோம். நாங்கள் தீர்வை செலுத்தியதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கான பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றால் நான் தான் செலவு செய்து வாங்கிக்கொடுத்தேன். பட்டாவை நான் தான் வாங்கிக்கொடுத்தேன் என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2 முதல் 6 பிரதிவாதிகள் கிரயம் பெற்றபிறகு பட்டா 2 முதல் 6 பிரதிவாதிகள் பெயருக்கு மாறுதல் செய்யப்பட்டது என்றால் மாறியிருக்கலாம், பணத்தை கொடுத்து எங்களை விரட்டியடித்துவிட்டார்கள். 1ம் பிரதிவாதியின் கணவர் இறந்தபிறகு 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள சொத்தை அபகரிக்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. குடும்ப சொத்துக்களில் 1ம் பிரதிவாதி பாகம் கேட்டுவிடுவார் என்பதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் தவறு. தாவாவில் கோரியுள்ள எந்த பரிகாரமும் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 வழக்கு நிலுவையில் உள்ளபோது வழக்கிற்காக உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2ம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆய்வாளரிடம் கொடுத்ததற்கு ஆதாரம் இல்லை என்றும், அதை நாங்களாக உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.